# காரைக்காலம்மையாரின் இலக்கியங்கள் கூறும் அறக் கருத்துக்கள்.

ந.அருள்மொழிச்செல்வன்[1] , பேராசிரியர் ம.இரகுநாதன்[2]


## ஆய்வுச்சுருக்கம்

*தமிழர் வரலாற்றில் இந்துசமயமரபில் ஒரு திருப்பு முனையாகக் காரைக்காலம்மையார் விளங்கினார். சிவனடியார்களை உபசரிக்கும் பண்பினைக் கொண்ட இவர், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு இந்துசமய மறுமலர்ச்சிக்காக பணியாற்றிய பெண்பாற் புலவராவார். இவர் வாழ்ந்தகாலம் தொடர்பில் ஆய்வாளர்களிடையே இடர்பாடுகள் உண்டு. சமணமும், பௌத்தமும் மேலோங்கி ஆதிக்கம் செலுத்திய அறநெறிக் காலத்தில் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்த சைவசமய விழுமியங்களைப் புத்துயிர் பெறவைத்த பெருமை அம்மையாருக்குரியது. புனிதவதியார் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் ஒரு பெண்ணாக இருந்துகொண்டு ஆதிக்கநிலையில் இருந்த வணிக மேலாண்மைச் சமூகத்தின் கட்டுப்பாட்டுகளைத் தகர்த்துக்கொண்டு இல்லற வாழ்வினையும் துறந்து இந்துசமயத் தத்துவங்களையும், அறக் கருத்துக்களையும், இறைவனது பெருமைகளையும், சமயவாழ்வியல் நெறியினையும் உலகறியச் செய்வதற்காகவும், இந்துசமய மறுமலர்ச்சிக்காகவும் உழைத்த பெண் பக்தி இலக்கியவாதியாகத் திகழ்கின்றார். அம்மையாரது வரலாறு திருத்தொண்டர் பெரியபுராணத்தில் ஐந்தாவது சருக்கமான திருநின்ற சருக்கத்தில் நான்காவது புராணமாய் அமைந்துள்ளது. இவரது இலக்கியங்கள் பதினொராந் திருமுறைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஐம்பொறிகளும் உந்துவதால் இயங்குகின்ற ஐம்புலன்களையும் பாலியல் நடத்தைகளையும் கட்டுக்குள் கொண்டுவருவதனூடாக ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்வியலை வாழமுடியும் என வற்புறுத்திய அறநெறிக் காலத்தில் அறம் கூறும் இலக்கியங்கள் பல தோற்றம்பெற்றன. இவ்விலக்கியங்களினூடாக மதப்பிரசாரங்கள் மேற்கொண்டு சமணமும் பௌத்தமும் வெற்றிகண்டன. கட்டற்ற வாழ்வியலில் இருந்து கட்டுப்பாடான வாழ்வியலை நோக்கி நகர்ந்த மக்களுக்கு அதீத கட்டுப்பாடு மனதில் விரக்தியைத் தோற்றுவித்த தருணத்தில் காரைக்கால் அம்மையாரால் இந்துசமய மறுமலர்ச்சிக்காக இலக்கியங்கள் படைக்கப்பட்டன. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதனூடாகப் பேரின்பப் பெருவாழ்வினை அடையலாம் என்றும், இல்வாழ்வானே இயல்புடைய மூவருக்கும் துணைவன் என்றும் நெறிப்படுத்திய அம்மையார், வாழ்வியலின் நிலையாமை, அறநீதிக் கருத்துக்களைத் தன் இலக்கியங்களில் உள்ளடக்கிப் பாடினார். அறத்துடன் கூடிய இல்லற வாழ்வியல் துறவைவிடச் சிறந்ததெனக்கூறி மனிதவாழ்வியலைச் செம்மைப் படுத்தினார். அம்மையார் தன் இலக்கியங்களில் வைதிகம் சார்ந்த அறக் கருத்துக்களைக் கையாண்டது மட்டுமல்லாது, சமண, பௌத்தர்கள் எடுத்துக்கூறிய அறக்கருத்துக்கள், ஒழுக்க விழுமியங்கள், நிலையாமைக் கருத்துக்கள் என்பவற்றையும் கையாண்டுள்ளார். அத்துடன் இறைவனை அறக் கடவுளாகக் காட்டி அறத்தினை வலியுறுத்தியுள்ளார். காரைக்காலம்மையாரின் அறக் கருத்துக்களின் கையாட்சி பக்தி இலக்கிய மரபில் எத்தகைய வகிபங்கைப் பெறுகின்றது? என ஆராயும்முகமாக இக்கட்டுரை அமைகின்றது. இந்த ஆய்வில் வரலாற்றுமுறையியல், விவரண முறையியல் என்பன ஆய்வு முறையியல்களாக அமைந்துள்ளன.*


**திறவுச்சொற்கள்:-** காரைக்காலம்மையார், சைவசமயதத்துவங்கள், அறம், வாழ்வியல்நெறி, ஒழுக்கவிதிகள்.

[1]*தமிழில் முதுதத்துவமாணி ஆய்வுமாணவன். உயர் பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். யாழ்ப்பாணம்.*

[2]*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.*

nada19arul@gmail.com

## அறிமுகம்

தமிழர் வரலாற்றில் இந்துசமயமரபில் ஒரு திருப்பு முனையாகக் காரைக்காலம்மையார் விளங்கினார். சிவனடியார்களை உபசரிக்கும் பண்பினைக் கொண்ட இவர், இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு இந்துசமய மறுமலர்ச்சிக்காக பணியாற்றிய பெண்பாற் புலவராவார். சமணமும், பௌத்தமும் மேலோங்கி ஆதிக்கம் செலுத்திய அறநெறிக் காலத்தில் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருந்த சைவசமய விழுமியங்களைப் புத்துயிர் பெறவைத்த பெருமை அம்மையாருக்குரியது. புனிதவதியார் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் ஒரு பெண்ணாக இருந்துகொண்டு ஆதிக்கநிலையில் இருந்த வணிக மேலாண்மைச் சமூகத்தின் கட்டுப்பாட்டுகளைத் தகர்த்துக்கொண்டு இல்லற வாழ்வினையும் துறந்து இந்துசமயத் தத்துவங்களையும், அறக் கருத்துக்களையும், இறைவனது பெருமைகளையும், சமயவாழ்வியல் நெறியினையும் உலகறியச் செய்வதற்காகவும், இந்துசமய மறுமலர்ச்சிக்காகவும் உழைத்த பெண் பக்தி இலக்கியவாதியாகத் திகழ்கின்றார். தமிழிலக்கியப் பரப்பில் அறத்தினை பொருளாகக் கொண்டு கட்டமைந்த காலமாகத்திகழும் அறநெறிக் காலத்தில் தோன்றிய நூல்கள் யாவும் அறத்தின் செல்வாக்கிற்குட்பட்ட நூல்களாக அமைவது தவிர்க்க முடியாததாகும். அவ்வகையில் காரைக்காலம்மையார் தோன்றிய காலம், அவரது வாழ்வியல், அவரால் படைக்கப்பட்ட நூல்கள், அறம், அம்மையாரின் நூல்கள் கூறும் அறக் கருத்துக்கள், அவற்றின் மதிப்பீடு தொடர்பில் கோட்பாட்டு நிலை நின்று ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## காரைக்காலம்மையாரீன் காலம்

தமிழில் தோன்றிய அற இலக்கியங்களுக்கும் அவை தோன்றிய சமூகத்திற்குமிடையில் நெருக்கமான உறவு காணப்படுகின்றது. அத்தொடர்பானது அவ்விலக்கியங்கள் எழுந்த காலத்தின் சூழமைவின் அடியாகவே தோன்றுகின்றது. எனவே அக்காலத்தினை வரலாற்றுச் சூழமைவுப்படுத்துவதன் மூலம் அற இலக்கியங்ககளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். மனிதகுலத்தின் சிந்தனை, வரலாற்றுடன் எவ்வாறு தொடர்புபட்டிருக்கின்றதோ அவ்வாறே நீண்ட கால வாழ்வியலைக் கொண்டிருக்கும் தமிழர் சிந்தனையும் வரலாற்றுடன் தொடர்புபட்டிருக்கின்றது. அவ்வாறானதொரு வரலாற்றினைக் கொண்டுள்ள தமிழர்களிடம் வெளிப்பட்டிருந்த அறம்பற்றிய சிந்தனை பழந்தமிழர்கால இலக்கியங்களிலிருந்து இன்றுவரை பதிவாகி வருகின்றது.

அறம்பற்றிய சிந்தனையை ஒரு கோட்பாட்டு நிலைப்படுத்தி அதனை வரையறைப்படுத்திய காலம் அறநூல்கள் பெருமளவு தோன்றிய காலமாகும். அறத்தினை ஒழுங்கமைத்து அதை சமூக, சமய இயக்கத்தின் அடிப்படையாகக் கொள்ளும் மரபு அறநூல்கள் பெருமளவு தோன்றிய காலத்திலேயே காணப்படுகின்றது. ஆதலால் இக்காலத்தில் அறத்தினைக் கோட்பாட்டு நிலைப்படுத்தி விளக்கும் அற இலக்கியங்கள் பெருமளவு் தோற்றம்பெற்றன.

இவ்வற இலக்கியங்கள் தோன்றிய காலம் குறித்து ஆராய்ச்சியாளர்களினிடையே கருத்து வேறுபாடுகளுண்டு. அதுமட்டுமன்றி அவர்களுடைய ஆய்வும் நீண்ட வரலாற்றையும், முரண்பாடுகளையும் கொண்டமைந்துள்ளன. ஆகவே அற இலக்கியங்கள் தோன்றிய கால வகைப்பாட்டினை வரலாற்று நிலைப்படுத்தி ஆய்வு செய்வதனை விடுத்து அற இலக்கியங்கள் தோற்றம்பெற்ற ஒழுங்கமைப்பில் அறத்தினை நோக்கலாம்.

பதினெண் மேற்கணக்கு நூல்களில் அறத்தினை எட்டு வகையாகக் கருத்து நிலைப்படுத்திப் பார்க்கும் மரபு காணப்பட்டது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் அறம் பற்றிய கருத்துக்களைக் கோட்பாட்டு நிலைப்படுத்திக் கூறும் மரபைக் காணக் கூடியதாகவுள்ளது. அத்துடன் அறத்தினைக் கலையாகச் சொல்லும் கலைப் படைப்புக்களையும் அறத்தினை இலக்கணப்படுத்தி நோக்கும் இலக்கண நூல்களையும் அறம் பற்றிய சிந்தனை புரையோடியுள்ள பக்தி நூல்களையும் இக் காலத்தில் காணலாம். அறநூல்கள் பெருந்தொகையாகத் தோன்றிய இக்காலத்தில் பக்தி இலக்கியங்கள் தோன்றுவதற்கான காரணிகளையும் அவற்றின் பகைப்புலங்களையும் நோக்குவோம்.

இயற்கைநெறிக்கால இனக்குழும மக்களின் வாழ்வியலில் ஏற்பட்ட சிதைவு, சமூக, பண்பாட்டிலும், கருத்தியலிலும் மாற்றங்களை உருவாக்கின. இயற்கைநெறிக்கால மக்களிடம் நீர்வழி நாகரிகம், நிரந்தர குடியிருப்புக்கள், சமூகக் கட்டமைப்புக்கள் என்பன உருவானது. இதனால் நில அடிப்படையில் தொழில் பிரிந்தது. சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புக்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. சமண, பௌத்தர்களின் அறம், ஒழுக்கம் முதலிய போதனைகள் தனி உடைமையை ஆதாரமாகக் கொண்டமைந்தன. வணிகம் மேலாண்மை பெற்றிருந்தது. உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்ளாத புதியதொரு வர்க்கம் தோற்றம் பெற்றது. திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்து அளவறிந்து ஈந்து நாட்டைக் காத்தல் அக்கால அரசனின் கடன் எனப்பட்டது.

பிற நாட்டு வணிகமும் பொருளாதார கட்டமைப்பின் விரிவாக்கமும் சமூக மாற்றத்திற்கான காரணிகளாயின. இதனால் சமுதாயத்தில் தொழில் பிரிவினைகள் தோன்றின கைத்தொழிலும் விவசாயமும் இரண்டாகின. நகரம் நாட்டுப்புறத்திலிருந்து வேறுபட்டது. செல்வமுடையோரும் செல்வத்திற்காக ஏங்கி நிற்போரும் சமூகத்தில் காணப்பட்டனர். அறிவும் செல்வமும் பிரிந்திருந்தது சமூகத்தில் பசிப்பிணியும், வறுமையும், இரப்போரும், ஆண்டான் அடிமை வாழ்வும், இக்காலத்தில் இருந்தமைக்குச் சான்றுகளுண்டு. அறநூல்களின் தோற்றத்திற்குப் பொருளாதாரம் பிரதானப்பட்டிருந்தது.

அறநெறிக்காலத்தில் அரசன் சமுதாயத்தலைவன், மனிதருள் உயர்ந்தோன், சான்றோன், அறிஞனாக மதிக்கப்பட்டான். இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் என்பன அரசின் தலையான பணியாகக் கருதப்பட்டது. மன்னனுக்கும் மக்களுக்குமிடையில் இடைவெளி தோன்றியது. இதனால் இனக்குழுத்தலைவர்கள், அரசர்கள், அந்நியர்கள் ஆகிய

மூன்று பிரிவினருக்குமிடையே போர்கள் நடைபெற்றன. இப்போர்கள் அரசியலில் பதற்றமான சூழலை ஏற்படுத்தியிருந்தது. அரசர்களுடன் வாதிடக் கூடிய நிலையில் வணிக வர்க்கம் இக்காலத்தில் மேலோங்கியிருந்தது.

இக்கால ஆளும் வர்க்கத்தினர் அனேகமாக வேற்றுமதச் சார்புடையவர்களாக இருந்தனர். அதனால் இலக்கியங்களில் விரவிக் காணப்பட்ட அறம் பற்றிய சிந்தனையும், சமூக பண்பாட்டில் பேணப்பட்ட அறக் கருத்துக்களும் மேலோங்கியது. சமுகத்தினால் நெறிப்படுத்தப்பட்ட சடங்கு, சம்பிரதாயங்கள் அக்காலத்து அறக் கருத்துக்களை நடைமுறைப்படுத்தின.

அறநெறிக் காலத்தில் ஒப்பீட்டளவில் அரசுருவாக்கம் வளர்ச்சியடைந்த நிலையில் சமூக அதிகாரத்தை மேலும் கட்டமைக்க வேண்டிய தேவையும், அதற்கான முயற்சிகளும் அறக் கருத்தியலின் அடியாக தோன்றின. பெருந்தெய்வ வழிபாடு பெருமதமாக வளர்ச்சியுறாத நிலையில் அரசுருவாக்கம் முனைப்புப் பெற்ற போது பெருந்தெய்வ வழிபாடும் கோயில்களும் மதத்தை நிறுவனமயமாக்கும் முயற்சிகளும் அவற்றை முன்னிறுத்துகின்ற அற இலக்கியங்களும் ஏனைய சமூக அமைப்புக்களும் இக்காலத்தில் அதிகார மையப்படுத்தலை வலியுறுத்தின. இதனால் குடும்பம், இல்லறம், ஒழுக்கம், கற்பு, பக்தி, ஆகிய சமூக அமைப்புக்களும் கருத்தியல்களும் மேலோங்கின. குடும்பம் என்னும் அமைப்பு அதன் அர்த்தத்தில் வளர்ச்சியுறாத பண்டைத்தமிழ் அகப் பாடல்கள் அறநெறிக் காலத்தில் ஒப்பீட்டளவிலேனும் எழுதப்படாமையையும் அக்காதல் உணர்வு இறைவனுடனான காதலுணர்வாக மாற்றம் பெற்று பக்தி இலக்கியமாக வெளிப்படுவதையும் இக்காலப் பக்தி இலக்கியங்களில் காணமுடியும்.

இல்லறம், கற்பு, பக்தி, விருந்தோம்பல், குடும்பம், பெருந்தெய்வ வழிபாடு ஆகிய தளங்களினூடாக இக்காலச் சமூகம் வளர்ச்சிபெற்றது. சமூக அதிகாரத்தை ஒருமுகப்படுத்துவதற்காக பண்பாடு என்ற கட்டமைப்பைத் தோற்றுவித்தது. புதிதாகத் தோற்றம் பெற்ற சமூக அமைப்புக்களின் அதிகாரங்களும், அதிகாரம் பெற்ற அரசின் வகிபாகமும் இணைந்து தெளிவானதொரு வரையறையை நோக்கிப் பிரயாணித்தன.

அதேபோல சமூக உறவுகளும் தனிநபர் நடத்தைகளும் குடும்பம் குலம் என்பவற்றிற்கு இடையிலான உறவுகளும் அவற்றின் அதிகாரங்களும் ஒழுங்கமைக்கப்பட்டன. இதன் விளைவாக இல்லறம், ஒழுக்கம், கற்பு, விருந்தோம்பல், என்னும் குடும்பக் கட்டமைப்பின் உருவாக்கம், அமைதியான வாழ்வியல் பற்றிய சிந்தனையைத் தோற்றுவித்தது. அத்துடன் இறுக்கமாக வரையறுக்கப்பட்டு மீறமுடியாத கருத்தியல்களாக அறக்கருத்துக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அந்நியர் ஆட்சி, அவைதிக மதத்திற்கு ஆட்சியாளர்கள் கொடுத்த ஆதரவு சமூக பண்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியதுடன் வணிக மேலாண்மையும், நிலவுடைமைக்கும் வணிகத்திற்கும் இடையிலான முரண்பாடுகளும் இதற்குக் காரணமாயின.

பண்டைத்தமிழ்ச் சமூகத்தின் காதலுணர்வுக்கு முக்கியத்துவமில்லாது போயிற்று. அக்காலத்தில் நிலவிய மதச்சார்பற்ற செழுமையான அக இலக்கிய மரபை அறநெறிக்காலப் பெருந்தெய்வ பக்தி இலக்கியமரபு கையாளத் தொடங்கியது. சமயப் பிரச்சாரவாதிகள் அறக் கருத்துக்களைப் பயன்படுத்தி இலக்கியம் படைத்த காலத்தில் பக்திமரபில் நின்று பாடிய அம்மையாரிடம் அதன் தாக்கம் தவிர்க்க முடியாததாயிற்று. இவ்வகையில் சமயப் பிரசாரம் முன்னிலை பெற்ற சமூகத்தின் சமய நிலை பற்றிய நோக்கு அவசியமாகின்றது.

பண்டைக்காலமக்கள் இயற்கையையும் அதனோடு இயைந்த தெய்வங்களையும் வழிபட்டனர். இயற்கைசார் சுதேச மத வழிபாடுகள் காணப்பட்டன. அறத்தினைத் தெய்வமாக வழிபடும் முறையும் காணப்பட்டது. இயற்கைநெறிக்காலச் சிதைவு சமணமும், பௌத்தமும் அரச ஆதரவுடன் மதப்பரப்புரை செய்வதற்கு வழிவகுத்தது. மதப்பரப்புரைக்குக் கருவியாக அறக்கருத்துக்கள் பயன்படுத்தப்பட்டன. வைதீக அவைதீக மதங்களுக்குள் ஏற்பட்ட போட்டியினால் பெருமளவு அறநூல்கள் தோன்றின. இதனால் ஏனைய நூல்களும் அறநீதிக் கருத்துக்களின் தாக்கத்துடனேயே தோன்றின. இக்கால நூல்களின் அறம்சார்ந்த கருத்தியலுக்கு சமயக் கொள்கைகள் முதன்மைபெற்றது. இவ்வகையில் அம்மையார் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களையும் புனைவுகளையும் நோக்காது யதார்த்தவாத பால்நிலை அனுபவங்களூடு வாழ்ந்து படைப்புக்களைத் தந்தபடைப்பாளியாக இவரை நோக்குவதேசிறந்தது.

**சைவ சமய வரலாற்றில் காரைக்காலம்மையார்**

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான அம்மையாரின் வரலாற்றினை முழுமையாக அறிந்து கொள்வதற்கு சேக்கிழாரது பெரியபுராணமே ஆதாரமாக அமைகின்றது. அதில் ஐந்தாவது சருக்கமான திருநின்ற சருக்கத்தில் நான்காவது புராணமாக காரைக்காலம்மையார் புராணம் அமைகின்றது. சேக்கிழார் அறுபத்தாறு பாடல்களில் அம்மையாரது வரலாற்றினைப் பாடியுள்ளார்.

அம்மையார் வரலாற்றைப் பாடுவதற்குச் சேக்கிழாருக்கு அடிப்படையாக அமைந்தவை சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டர் தொகையும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியும் ஆகும். இவற்றைவிட சேக்கிழார், அம்மையாரது பாடல்களையும் தான் வாழ்ந்த காலத்தில் மக்களிடையே செவிவழியாக வழங்கப்பட்டு வந்த செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். இவற்றினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கூறப்படும் அம்மையாரின் வரலாற்றினை ஏற்றுக்கொள்ள முடியுமா? என்னும் கேள்வி ஆய்வாழர்களிடையே எழுகின்றது. இது தொடர்பான வேலுப்பிள்ளையவர் களின் கூற்றை இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானதாகும்.

> பெரிய புராணம் கூறும் நாயன்மார் வாழ்க்கைச் சம்பவங்கள் பல நாயன்மார் வாழ்க்கையில் நடபெற்றனவா என்பது பெரிதும் ஐயத்திற்கிடமானது. தேவாரம் பாடிய மூவர் வாழ்க்கைச் சம்பவங்களைப் பொறுத்தவரை அவற்றுள் சில அவர்கள் பாடல்களிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக் காட்டுவர் அறிஞர் எனப்படுபவர் சிலர். இவ்வாறு சுட்டிக் காட்டப்படும் இடங்களிற் பல வலிந்து பொருள் கொள்ளப்படும் இடங்களாயிருக்கின்றன. சில நிகழ்ச்சிகள் அவர்கள் மானசீக உலகில் நடைபெற அவர்கள் அவற்றை நிதரிசன உலகில் நடந்தன போலப் பாடியிருக்கிறார்கள் எனக் கொள்ளக் கிடக்கிறது. இதற்குதாரணமாகச் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவரும் தன்னைத்தானே அருட்கவிஞரென அழைத்துக் கொண்டவருமாகிய இராமலிங்க சுவாமிகள்
> இறைவன் தன்னைக் கற்பழித்ததைப் பற்றிப் பாடுவதைக் கூறலாம். ஆகவே நாயன்மாரின் உண்மை வரலாற்றில் அவர்கள் பாடல்கள் முழுக்க முழுக்கத் தக்க சான்றுகளாகா. (வேலுப்பிள்ளை.ஆ, 1980:176)

வேலுப்பிள்ளை அவர்களின் இக்கூற்று ஒருவரின் அகநிலை சார் கருத்தினைக் கேள்விக்குள்ளாக்குவதாக அமைகின்றது. ஒருவர் தன் வாழ்வியல் அம்சங்களைத் தானே கூறுவதனை சான்றாக ஏற்றுக்கொள்வதில் இடர்பாடு உண்டெனக் கருதின் பிறர் கூற்றுக்களிலிருந்து ஒருவரின் வாழ்வியல் அம்சங்களைச் சான்றாக ஏற்றுக்கொள்வது காத்தியமானதாக அமையுமா என்னும் பலமான வினா எழுவது தவிர்க்க முடியாததாக அமைந்துவிடும். ஆதலால் வேலுப்பிள்ளையவர்களின் கூற்றை இவ்விடத்தில் கேள்விக்குள்ளாக்குவது பொருத்தமானதாகும்.

பெரியபுராணம் பாடிய சேக்கிழார் அம்மையாரைக் குறிப்பிடும் பெயர் ‘‘காரைக்காலம்மை’’ என்பதாகும். இதனைக் ‘காரைக்காலம்மை பெருமை கூறுவாம்’ (பெரி.பு:1716) அம்மையார் தம்மைக் ‘காரைக்காற்பேய்’ என்று அற்புதத் திருவந்தாதியிலும், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களிலும் பாடியுள்ளார்.

காரைக்காற்பேய் செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்ப மெய்து வாரே (தி.மூ.திரு.01-11)

காரைக்காற்பேய் தன் பாடல் பத்தும்
பாடியாடப் பாவ நாசமே (தி.மூ.திரு -2-11)

காரைக்காற்பேய் சொற்பரவுவார் ஆராத அன்பினொடு
அண்ணலைச் சென்றேத்துவார் பேராத காதல் பிறந்து (அற்.திரு.101)

செடிதலைக் காரைக் காற்பேய் (திரு.மூ.திரு:1-11)

காடுமலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக்கால்பேய் (திரு.இர.ம:2-11)

பேயாய நற்கணத்திலொன்றாய நாம் (அற். திரு:86)

இதனால் சேக்கிழாரும் அம்மையார் பேய்வடிவு வேண்டிப் பெற்றதாகப் புராணத்தில் குறிப்பிடுகின்றார்.

சுந்தர மூர்த்தி நாயனாரே முதன்முதலில் காரைக்காலம்மையாரைக் குறித்துப் ''பேயார்க்கும் அடியேன்'' என்று பாடியுள்ளார் அம்மையாரது பாடல்களைக் கருத்திற்கொண்டே இவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கமுடியும். இந்த ஒரு தொடரினூடாக அம்மையார் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள முடியாதுள்ளது. சேக்கிழாருக்கு முன்னர் அம்மையாரது வரலாற்றைப் பாடிய நம்பி தனது நூலில் இதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. இயற்கை நெறிக்காலத்திலிருந்து பாடலில் காணப் பெறும் சிறப்புத் தொடரால் பாடிய புலவரை அழைக்கும் வழக்கம் நிலவி வருவதை அணிலாடு முன்றிலார், கயமனார், செம்புலப் பெயனீரார், விட்ட குதிரையார், போன்ற பெயர்களின் ஊடாக அறிய முடிகின்றது. அம்மையாரும் தனது படைப்புக்களில் பேய்கள் பற்றிய வருணனைகளையும் படிமங்களையும் அதிகமாகக் கையாண்டதனால் பேயார் என அழைக்கப்பட்டிருக்கமுடியும்.

அம்மையார் இறைவனைப் 'பூக்கோல மேனிப் பொடிபூசி என்பனிந்த பேய்க்கோலம்' கொண்டு சுடலையில் நடனமாடுபவர் எனக் குறிப்பிட்டுள்ளார். அந்நடனத்தை காண்பதற்காகத் தன் உருவத்தை என்புடம்பாலான ஒரு பேயாகக் கற்பனை செய்து தன்னை உருவகித்துப்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக்காலோர் பெண்பேய் (திரு.மூ.திரு:1-1)

பாடியிருக்கலாம். இவ்வாறு அம்மையார் படைப்புக்களில் தன்னைப் பேயாகச் சுட்டியிருப்பதனால் 'பேயார்' என்பது அம்மையார் விரும்பிப் பெற்ற காரணப் பெயராகக்கூட இருக்கமுடியும்.

அம்மையாரது படைப்புக்களில் அவரைப் பற்றிய தகவல்கள் மிகக் குறைவாகவேயுள்ளது. அம்மையார் கயிலை சென்றது, இறைவன் அவரை அம்மையே என்றழைத்தது ஆகியவற்றிற்கு அவர் பாடல்களில் அகச் சான்றுகள் இல்லை. ஆனால் நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் இச்செய்திகளைக் குறிப்பிட்டுள்ளனர். சேக்கிழார் இவ்வாறு கூறுவதற்கு தூண்டுகோலாக அமைந்தவை அம்மையாரது இறைவனது நடனத்தைப் பற்றி பாடும் பாடல் கூறும் நடராசர் திருமேனிகளில் ஆனந்த நடனத்தின் அடியில் எலும்பு போர்த்த பேயுருவாக அமர்ந்து பாடிக்கொண்டிருக்கும் சிற்பங்களும் செப்புத் திருமேனிகளுமாகும். (வேதாசலம்.வெ, 1989.95) இதற்குச் சான்றாக அமையும் பின்வரும் கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன. கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்தே சிவனது நடனத்திற்குக் கீழே பேய் வடிவில் எலும்பு போர்த்த உடம்போடு அமர்ந்து இரு கரங்களால் தாளமிட்டுப் பாடும் நிலையில் காரைக்காலம்மையாரின் உருவங்கள் காணப்படகின்றன. (வேதாசலம்.வெ,

1989-95) கம்போடியாவில் பெண்டசிராய் என்ற இடத்திற் காணப்படும் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட ஓவியம் ஒன்று தென்னாட்டு நடராஜ வடிவத்தின் இடப்புறம் ஊர்த்துவ வடிவை உடைய ஒரு குழலை ஒருவர் வாசிக்க வலப்புறம் பேய்வடிவில் காரைக்காலம்மையார் அமர்ந்திருப்பதாக வரையப்பட்டுள்ளது. (திருநாவுக்கரசு.க.த, 1987-201) இச்சான்றுகளும் அம்மையாருக்குப் 'பேயார்' என்ற பெயர் பிற்காலத்திலேயே பெருவழக்காகி விட்டமையை உணர்த்துகின்றன.

அம்மையாரின் இலக்கியங்களையும் வரலாற்றுப் புனைவுகளையும் அம்மையார் பற்றிக் குறிப்பிடும் இலக்கியகாரர்களின் கதையாடல்களையும் அடிப்படையாகக் கொண்டு அம்மையாரின் வரலாற்றினைத் தெளிவுறமுடியாத போதிலும் அவரது இலக்கியங்கள் தமிழ் வரலாற்றிலும் சைவநெறி வளர்ச்சியிலும் விலக்கிநோக்க முடியாதளவிற்கு பெரும் பங்காற்றியுள்ளமை தெளிவாகின்றது. இவற்றைக் கொண்டு நோக்கும்போது அம்மையாரின் வரலாற்றின் இடர்பாடுகளுக்குள் நின்று அவர் வரலாற்றினைத் தேடுவதை விடுத்து அவரைப் பக்தியிலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் என்ற வகையில் அவர் படைப்புக்களை ஆராய்வது இவ்வாய்வு முயற்சிக்குப் பொருத்தமானதாகும்.

பக்தியிலக்கிய முன்னோடிகளுள் ஒருவர் என்ற வகையில் காரைக்காலம்மையார் பல வழிகளில் முதன்மை பெறுகிறார். அதேவேளை பக்தியிலக்கிய மரபில் அவருக்கு முன்னரோ அல்லது அவரது சம காலத்திலோ வேறெந்தவொரு பக்தியிலக்கிய முன்னோடி பற்றிய குறிப்புக்களும் இடம்பெறவில்லை. ஒரு பெண் எழுத்தாளருக்கு இலக்கிய முன்னோடிகள் இல்லாத நிலையில் இலக்கியப் பிரவேசமும் படைப்பும் இலகுவானதாக அமந்திருக்கமுடியாது. ஆனாலும் நான்கு சிறிய பிரபந்தங்களை இயற்றிய அம்மையாரின் படைப்புக்களில் புதிய யாப்பில் புதிய வடிவங்களையும் கவிதைப் பொருள் மரபில் புதிய உத்தி முறைகளையும் கையாண்டுள்ளமை தனிச்சிறப்புக்களாகும்.

இவர் பாடிய பிரபந்தங்கள் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை, மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்பவையாகும். இவரது பிரபந்தங்களில் அடங்கியுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை அற்புதத் திருவந்தாதி .101, திருவிரட்டை மணிமாலை .20, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். 1-11, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். 2-11. அடங்கலாக நூற்றுநாற்பத்துமூன்று ஆகும்.

அம்மையாரின் இலக்கியங்களைக் கொண்டு அறக்கருத்துக்களை ஆராய்வதற்கு முன்பாக அறம் பற்றிய புரிதல் அவசியமாகின்றது.

**அறம்**

அறம் என்றால் என்ன என்பது பற்றித் தெளிவான புரிதலுக்கு வருவதில் ஆராய்ச்சியாளர்களிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஏனெனில் காலம், இனம், மொழி, சமூகம், சமயம், கலை, கலாசாரம் வர்ணப்பாகுபாடு சார்ந்து மாறிக்கொண்டிருக்கும் அறத்திற்கு சரியானதொரு வரைவிலக்கணத்தினை முன்வைப்தென்பது சவாலான விடயமாகவே உள்ளது.

'Ethics' என்ற ஆங்கிலச் சொல்லின் இணைப்பதிலிச் சொல்லாக அறம் திகழ்கின்றது. 'Ethice'என்ற சொல் 'Ethos'என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும்.இச்சொல் முதலில் மக்கள் குழுமியிருந்த இடம் என்ற பொருளைக் குறித்தது. பின்னர் பழக்க வழக்கம், மனநிலை, குணம், சிந்திக்கும் முறை, முதலான பொருள்களைக் குறிக்கப் பயன்பட்டது. 'நல்ல, தீய செயல்களில் இருந்து தோன்றும் அற இயல் பற்றிய ஆய்வியல் கலையே''எதிக்ஸ்'(Ethics) எனப்பட்டது 'Ethics' என்ற சொல்லை இலத்தீன் மொழியில் 'mos' என்பர் 'Mores' என்பதற்கு ஈடான மொழிபெயர்ப்பாக பழக்கவழக்கம், குணம், நடத்தை, உள்ளுணர்வு, சட்டம், ஒழுங்கு, நாகரிகம், ஆடைமுறை முதலானவற்றைக் கூறலாம். (Ethics, 1989: P.05) கிரேக்க முன்னோடிகளையும் 'அரிஸ்ரோட்டிலையும்' சார்ந்து 'சீரோ' என்பவர் 'Moralitas' என்ற சொல்லை உருவாக்குகின்றார்.'Ethics'என்ற கிரேக்கச் சொல்லும் 'Moralitas' என்ற இலத்தீன் சொல்லும் ஒன்றாகவே நோக்கப்படுகின்றது. '. (முத்துலட்சுமி.ச பக்கம் - 04) அறம் என்னும் பதத்திற்கான பொருளாக வழியைக் கூறு, அறுத்துச்செல், வழியை உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து, போன்ற வற்றைக் கூறலாம். சுருக்கமாக ''தீயவற்றை அறுத்தெறிதல்'' எனப் பொருள் கொள்ளமுடியும். 'அறம்' என்பதன் வேர்ச் சொல்லான 'அறு' என்பதற்கு ''வரையறுத்தல்'' என்று பொருள் கொள்ளலாம். பழக்கவழக்கம், குணம், நடத்தை, ஒழுக்கம் என்பவற்றை வரையறுத்துக் கூறுவது அறம் எனப்பட்டது. இவ் அறத்தினை இயல்பூக்க நிலை, மனச்சான்று நிலை, மரபொழுக்க நிலை என மூன்றாக வகைப்படுத்தும் மரபு காணப்படுகின்றது. (நடராஜன்.சோ, 2008, பக் 09-10) திருக்குறளுக்கு உரை தந்த பரிமேலழகர், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழித்தலும் அறம எனக் குறிப்பிடுகின்றார். மாசற்ற மனநிலை அறமாகும். (குறள்.34) அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் இல்லதொழித்தல் அறம். (குறள்.35) அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை. (குறள்.49) அறத்தின் பயன் 'சிவிகை பொறுத்தானுக்கும் ஊர்ந்தானுக்கும் இடைப்படது. (குறள்.37) மனிதன் தனக்கென வகுத்தக்கொண்ட எண்ணம், சொல், செயல் ஆகிய வரையறை சார்ந்த கருத்துப் பொருளே 'அறம்' எனப் பல வரைவிலக்கணங்களை கூறமுடியும்.

அறம் மனிதர்களின் அன்றாட நடத்தைகளினால் தீர்மானிக்கப்படுகின்றது. ஐம்புலன்களை ஒடுக்குவதால் உருவான நடத்தைகளால் அறங்கள் தோன்றுகின்றன. ஐம்புலன்களின் இயக்கங்களான சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், பாலியல் செயற்பாடுகள், என்பவற்றைக் கட்டுக்குள் கொண்டுவதனை அறம் எனக் குறிப்பிடலாம். நாக்கு, அறத்தினை ஆக்க அழிக்க மறைக்கவல்ல ஆதிக்க நிலைப்பட்ட முதல் நிலை உறுப்பானது. (ராஜ் கௌதமன்., (1997), பக்-13) அறம் உடைமை சார்ந்த கருத்துப் பொருளாகும். இயற்கையால் உவந்தளிக்கப்பட்ட உலகப் பொருட்களை உடைமை பூணுதல், பாதுகாத்தல், நுகர்ந்து கொள்ளுதல் உவந்தளித்தல் பகிர்ந்து கொள்ளுதலில் கொண்டுவரப்பட்ட ஒழுங்கமைப்புக்களும் கட்டுப்பாடுகளும் தடைகளும், தண்டனைகளும் அறமாகத் தோன்றியது. அதிகாரக் குடையின் கீழ் உருவாக்கப்பட்ட சடங்குகளின் உட்பொருளாக அறம் பேசப்பட்டது. அறம் நிலைப்பதற்கு அச்சமே பிரதானம். அதிகாரம் மிக்கவர்கள் அறத்தை நிலைநாட்டினர். தண்டனைக்கு அஞ்சி அறக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. இவ் அறத்திற்கெனத் தனித்துவமாக இலக்கணம் வகுக்கப்பட்டது. அம்மையார் தனது பக்தி இலக்கியத்திற்குள் அறக் கருத்துக்களை பாடுபொருளாகப் பயன்படுத்தி இருப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. அவற்றினைப் பகுத்து ஆராய்வதனூடாக அம்மையாரின் இலக்கியங்களில் கூறும் அறக்கருத்துக்களை ஆராய்வோம்.

**காரைக்காலம்மையாரும் அறக்கருத்துக்களும்**

அம்மையார் அறக்கருத்துக்களை தன் இலக்கியங்களில் கையாண்டிருப்பதனை அவதானிக்க முடிகின்றது. அக்கருத்துக்களை அவரது இலக்கியங்களின் அடிப்படையில் நோக்குவோம். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில்,

“நாடும் நகரும் திரிந்துசென்று
நன்னெறி நாடி நயந்தவரை......” (திரு.மூ 01-8)

எனும் அடிகளில் வரும் நன்நெறி என்னும் பதம் அறத்துடன் இணைந்த நெறி எனப் பொருள்படுகின்றது. “நயத்தல்” என்னும்பதம் நயம்பட உரைத்தல் என்னும் பொருளை வெளிப்படுத்துகின்றது. நன்னெறி என்பது நல்லொழுக்கநெறி என்றும் அதனை சமயநெறி என்றும் பொருள் கொள்ள முடியும் திருவள்ளுவர் இந் நன்னெறியைப் பொய்தீர் ஒழுக்கநெறி எனக் குறிப்பிடுகின்றார். இதனை பரிமேலழகர் குற்றமற்ற சமயநெறி என்று பொருள்கொள்கின்றார். குற்றமற்ற சமய நெறியினூடாக அறக்கருத்துக்கள் போதிக்கப்படுவதனால் அம்மையார் அறக் கருத்துக்களை போதிக்கும் ஆசான்களை ஆதரித்துள்ளார் என்பது அவரது பாடல்களினூடாக வெளிப்படுகின்றது.

“.....கூசின மனத்துக் கொண்டிருந்து – பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத்து என்றும்
பிறவாமை காக்கும் பிரான்”(திரு. இர. - 02)

என்னும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் வரும் பாடலடிகள் சமண பௌத்தர்களின் நிலையாமைக் கருத்திற்கு போட்டியாக அமைந்துள்ளது. தீமைகள் செய்வதற்கு உள்ளத்தால் கூச்சமடைந்து இறைவன் புகழைப் பேசி இறைவனை மறவாது வாழுபவன் இப்புவியில் வேறு பிறப்பினைப் பிறக்காதவாறு சிவனால் ஆட்கொள்ளப்படுவான் என்று அம்மையார் குறிப்பிடுகின்றார். இங்கு சமய நெறியினைச் சீராகக் கடைப்பிடிக்கும் மனிதனுக்கே அந்த நற்பேறு கிடைக்கும் என்பது புலனாகின்றது. சமய நெறி என்பது குற்றமற்ற ஒழுக்கநெறியான பொய்தீர் ஒழுக்கநெறி. இது அறவிழுமியங்களால் புனையப்பட்டது. ஆதலால் அம்மையார் சமய ஒழுக்க நெறியில் நின்று வாழ்பவனுக்கே வீடுபேறு கிட்டும் எனக் குறிப்பிடுகின்றார். இதனை வள்ளுவரின் 'அற ஆழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு அல்லால்....' (குறள்-08) என்னும் குறள் குறித்து நிற்கும் அறத்துக்கு இருப்பிடமான இறைவனின் பாதங்களை சேர்ந்தவர்களுக்கே பிறவியாகிய கடலைக் கடக்க முடியும் என்னும் கருத்துக்கு ஒப்பானதாகும். இக்கருத்தினை அரண்செய்யுமாறு அம்மையார் அடுத்தபாடலை அமைத்துள்ளார். "......ஆழாமே வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன்....." (திரு. இர - 04) அதில் இறைவனிடம் அடைக்கலமாகி வாழுபவன் இப்புவியில் மீண்டும் பிறக்காதவாறு ஆட்கொள்ளும் வல்லமை உடையவன் இறைவன் என்று குறிப்பிடுகின்றார்.

புண்ணியம் என்னும் பதம் அறத்தின் பயனைக் குறிப்பது. அறம் செய்வதால் ஏற்படுகின்ற இந்தப் புண்ணியம் இப்பிறப்பில் ஈடேற்றத்தினையும் மறுமையில் நற்பிறப்பையும் கொடுக்கவல்லது. ".....புண்ணியனை – அங்கொருநாள் அவாவென்று ஆழாமைக் காப்பவனை..."(திரு.இர- 06) "......மொய்கழற் புண்ணியனே."(திரு. இர - 15) என்னும் அடிகளில் இறைவனைப் புண்ணியன் என்று அம்மையார் உரைக்கின்றார். அந்தப் புண்ணியத்தினை வழங்கும் அதிபதியாக சிவனைக் குறித்தால் அக்கால மக்களிடத்தில் அறத்தின்பால் பற்றினையும் அப்பற்றின் வெளிப்பாடாக சமணக் கருத்துக்களிலிருந்த பற்றையும் உடைத்தெறிந்து சிவனின்பால் சித்தத்தை வைக்குமாறு தூண்டும் அம்மையாரின் கருத்தியல் வெளிப்பாடாகவே தோன்றுகின்றது. மக்களுக்கிருக்கும் அவாவாகிய தீய பற்றுக்குள் ஆழ்ந்துவிடாது அதனை வெல்லச் செய்து காப்பவன் இறைவன் என்னும் கருத்தையும் அவர் குறிப்பிடுகின்றார்.

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சோல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்" (குறள்-35)

என்னும் பாவில் விடுக்கவேண்டும் எனக் குறிப்பிடப்படும் நான்கு விடயங்களில் ஒன்றாக 'அவா' வள்ளுவரால் சுட்டப்பட்டுள்ளது. இந்த அவாவை அறுத்தாலே வாழ்வின் இலட்சியமான ஈடேற்றத்தை அடைய முடியும் அதற்காக "பற்றுக பற்றற்றான் பற்றினை...." (குறள்-350) பற்றற்றவனாகிய இறைவனைப் பற்றிக்கொள்ளுமாறு வள்ளுவர் குறிப்பிட்டதுபோல் அம்மையாரும் இறைவனை அறத்தின் பதியாகக் காட்டி அறத்தினை நிலைபேறடையச் செய்வதுடன் சைவ நெறியின்பால் மக்களை ஈர்க்கின்ற உத்தியையும் கையாள்வதனைக்

காணக்கூடியதாகவுள்ளது. இதே கருத்தினைத் திருமூலரின் திருமந்திரத்திலும் காணக்கூடியதாகவுள்ளது. அவர் 'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனொடு ஆயினும் ஆசை அறுமின்கள்...'(திருமந்திரம்-2615) இறைவன் மீது கொண்ட ஆசையையாவது அறுத்துவிடுங்கள் என்று குறிப்பிடுவதனூடாக அறமாற்றுவதற்கும் ஈடேற்றம் அடைவதற்கும் ஆசை தடையாகவிருப்பது புலனாகின்றது.

".......நம்அடுந் தொல்வினையே." (திரு. இர - 11) "தொல்லை வினை வந்து சூழாமுன் தாழாமே..." (திரு. இர - 12), "ஆமாறு அறியாவே வல்வினைகள்…. (அற் - 34) என்னும் அடிகள் பழவினைகள் உண்மையான வீடுபேறைத் தரக்கூடிய உயர்ந்த ஒழுக்கநெறியை அறியாவண்ணம் மக்களை அலைக்கும் என்றும் அந்நெறியினை அணுகாவண்ணம் மறைத்து நிற்கின்ற மலங்களான வேற்றுச் சமய நெறிகளையும், அந்நெறிகளில் கற்பிக்கும் கல்வியையும் (அற்-33), பழவினைகளையும் அறுக்கவல்லவனாகச் சிவனைக் காட்டுவதனூடாக, அக்காலத்தில் தொல்வினைகளின் மேலிருந்த நம்பிக்கைகளை பயன்படுத்தி அம்மையார் இறைவனை அறுத்தற்கரிய தொல்வினைகளை அறுத்து ஆட்கொள்ளக்கூடிய வல்லாளராகவும் அறக்கடவுளாகவும் சித்தரிக்கின்றார்.

"புண்ணியங்கள் செய்தனவும் பொய் நெறிகட் சாராமே……"(திரு. இர - 16) என்னும் பாடலில் அறத்தினைச் செய்து கொண்டு பொய்யான சமயநெறியைச் சாராது 'நமசிவாய' என்னும் திருவைந்தெழுத்தினை உடையவனான சிவன்பால் அன்பு செலுத்துமாறு அம்மையார் குறிப்பிடுகின்றார். இதன்மூலம் அம்மையார் அறம் சிவன் சார்புடையது என்பதனை வெளிப்படுத்துவதனைக் காணலாம்.

"அன்பால் அடைவதெவ் வாறுகொல்....." (திரு. இர - 17) என்னும் பாடலில் உன்மீது அன்பினைச் செலுத்தி திருவடி நிழலை அடைவது எவ்வாறு என அம்மையார் வினவுகின்றார். திருவள்ளுவர் அன்புடைமை என்னும் அதிகாரத்தில் வரும்

"என்பு இலதனை வெயில் போலக் காயுமே
அன்பு இலதனை அறம்." (குறள்-77)

என்னும் குறளில் அன்பில்லாதவனை அறக்கடவுள் துன்புறுத்தும் எனக் குறிப்பிடுகின்றார். அதே அதிகாரத்தில்

"அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அ.்.தே துணை." (குறள்-76)

எனக் குறிப்பிடுவதனூடாக அன்பு அறத்திற்கு மட்டுமன்றி மறத்திற்கும் துணையாக நிற்கின்றது. என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். "......அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" (திரு மந் - 270) என்று அன்பினைச் சிவனுடன் தொடர்புபடுத்துகின்றனர். இங்கு உலக இருப்பிற்கும், இயக்கத்திற்கும் பிரதானப்படுத்தப்படுகின்ற அன்பு அறத்திற்கு நிலைக்களனாகத் திகழ்வது தெளிவுபடுத்தப்படுகின்றது.

இவ்வாறு அன்பு நெறியினைப் பேணிநின்ற சைவநெறியாளர்களாகிய யாம் “ஆர்வல்லார் காண அரணவனை அன்பென்னும் போர்வை அதனாலே போர்த்தமைத்துச்… ….”(அற் - 96) இறைவனை அன்பென்னும் போர்வை கொண்டு மூடிவைத்தோம் என அம்மையார் குறிப்பிடுகின்றார். பக்தி நெறியினை அன்பு நெறியாகப் பார்க்கும் பண்பு அவரிடம் இருப்பதனைக் காணமுடிகின்றது. அன்பு என்னும் ஒற்றைச் சொல்லைக்கொண்டு உலகினை ஆளும் திறனறிந்து தன் இலக்கியத்தில் இறைவனை உறவுநிலைப்படுத்தி அன்பு, கருணை, அக்கறை, பச்சாதாபம் முதலிய உணர் நிலைகளை கையாண்டு அறத்தின் வழிநின்று பக்தி நெறியாகிய சைவ நெறியின்பால் மக்களை ஈர்க்கும் கருத்தியலையும் அவரிடம் காண முடிகின்றது.

“உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமுன்…….”(திரு. இர - 20)

என்னும் பாடல் பகுதியில் உத்தமர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் அறத்தின் வழியில் நின்று வாழ்வாங்கு வாழ்ந்தவர்களாக இருப்பவர்களைக் குறிக்கின்ற பதமாகக் கொள்ளப்படுகின்றது. ஆதலால் அம்மையாரிடம் இறப்பதற்கு முன் உத்தமர்களாக இருந்தாலும் சிவன்பால் சித்தத்தினை வைப்பதனால் மட்டுமே இறைவனை அடையமுடியும் என்று அறத்தின்வழி நிற்கின்ற மனிதர்களை சைவ நெறிக்குள் உள்வாங்குவதற்கான கருத்தியலை அவதானிக்க முடிகின்றது.

அம்மையார் ஆணவ மலங்களை அறுக்கின்றவராக இறைவனைக் காட்டுகின்ற தன்மையில் புராண இதிகாசக் கதைகளை இலக்கியத்தில் கையாளுகின்றார். “....பாதத் தனிவிரலால் செற்றானை......”(அற்.திரு - 18), “…….நஞ்சுமிழும் நீணகத்தானை......”(அற்.திரு.- 14), “......முப்புரங்கள் அன்றெரித்தான்........”(அற்.திரு.- 32), முப்புரங்களை எரித்த வரலாறு, விடமுண்ட கண்டனான வரலாறு, சோதிவடிவான வரலாறு, இராவணனை பெருவிரலால் நசுக்கிய வரலாறு என்பவற்றை இலக்கியங்களில் கையாண்டுள்ளதனூடாக ஆணவம் அறத்திற்கு எதிரானது அறத்தினை நிலைநாட்டுவதற்காக இம் மலத்தினைக் களைந்து ஆட்கொள்ள வல்லவன் சிவனே என்று சைவ நெறியின்பால் மக்களுக்கு ஈர்ப்பு வரச்செய்யும் முயற்சியை அம்மையார் கையாண்டிருப்பதைக் காணலாம்,

அறத்தின்பால் நின்று வாழுகின்ற வாழ்க்கை நெறியினை காட்டாது விடுவாராயினும் “………படரும் நெறி படராரேனும்.........” (அற்.திரு -02) என்ற பாடலிலிருந்து இறைவனை அறத்தினைப் போதிக்கின்ற ஆசானாகக் காட்டும் கருத்தியலினை அம்மையாரிடம் காணக் கூடியதாகவுள்ளது. மேலும் “அறிவானுந் தானே அறிவிப்பான் தானே…..”(அற்.திரு - 20) என்னும் அடிகளில் இறைவன் எல்லாவற்றையும் அறிபவனாகவும் போதிப்பவனாகவும் அந்த அறிவினை அறிகின்றவனாகவும் இருக்கின்றான் என அம்மையார் குறிப்பிடுகின்றார்.

அறிவினைப் பெற்றுக்கொள்வதும், அதனைப் போதிப்பதும் அறமாகும். ஆகவே இறைவனை அறிவினைக் கொடுக்கின்ற அறக்கடவுளாக அம்மையார் பார்க்கின்றார்.

அறிவினைக் காட்டுகின்ற அறக்கடவுளின் வழியில் நின்று அறிவினைப் பெற்றுக்கொண்டு இறைவனின் பாதங்களைப் பற்றிக்கொண்ட நாம் இறைவலிமையால் யமதர்மனையும் வெற்றிகண்டோம் இருவினைகளை வேரறுத்துக்கொண்டு கொடுந்துயர் தருகின்ற நரகத்திலிருந்து விடுபட்டுக்கொண்டோம் “ காலனையும் வென்றோம் கடு நரகம் கைகழன்றோம் மேலை இடுவினையும் வேரறுத்தோம்....” (அந்.திரு - 81) என இறந்தகாலப் பன்மை விகுதியில் அம்மையார் பாடுகின்றார். அறத்தின் வழிநின்ற சைவ நெறியினைப் பற்றியவர்கள் அனைவரையும் பாடலில் குறிப்பிடுகின்ற கருத்தியலை அம்மையாரிடம் காணமுடிகின்றது.

“அவனே இருசுடர் தீ ஆகாசமாவான்….”(அந்.திரு - 21) என்னும் பாடலில் இறைவனை பஞ்சபூதங்களாகக் குறிப்பிடுகின்றார் அம்மையார். பஞ்சபூதங்கள் பேரியற்கையாகப் பார்க்கப்படுகின்றது. பேரியற்கையினால் உருவாக்கப்பட்டுள்ள உலகப் பொருட்களுடன், உயிரினங்களின் வாழ்வியல் அம்சங்களும் இணைந்து ஒரு ஒழுங்கமைப்பில் இயங்கும் நிலை இயற்கைப் பேரறம் எனப்படுகின்றது. இந்த ஞாலத்தில் வாழுகின்ற எல்லா உயிர்களினதும் தோற்றத்திற்கும், இருப்பிற்கும், நிலைபேற்றிற்கும் இந்த இயற்கை ஆதார சுருதியாய் அமைகின்றது. அதன் இயக்கத்திற்கும், ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்க்கைச் சுற்றுச் சீர்குலையாமல் இருப்பதற்கும் இயற்கையின் அறம், அதன் கருணை, முடிவில்லாப் பேரன்பே காரணமாகின்றது. அதாவது உலகின் இயற்கைக் கூறுகள் யாவும் அதன் சமநிலை குழம்பாதவாறு இயங்குதலே இயற்கைப் பேரறமாகும். நிலத்துடன் நீர், தீ காற்று, ஆகாயம் நான்கும் புணரும்போதுதான் உலகப் பொருட்கள் உருவாகுகின்றன. நுகர்ச்சியின் அடிப்படையில் அது உயிரினங்களின் இருப்புக்குத் தேவையான பயன்பாட்டுப் பொருட்களாக மாற்றம் பெறுகின்றன.

பண்டைத் தமிழர்கள் அடிப்படையில் பொருள் முதல்வாதச் சிந்தனை உடையவர்கள். நிலத்தினையும் உலக இயக்கத்திற்குக் காரணமான பொழுதினையும் முதற் பொருளாகக் கொண்டுள்ளனர். இயற்கையின் ஓர் அங்கமான தெய்வம் முதலான உறுப்புக்கள் யாவும் கருப்பொருளாகக் கருதினர். ‘தீயினுள் தென்றல் நீ பூவினுள் நாற்றம் நீ’ என்ற பரிபாடல் அடிகள் இயற்கையுடன் இறைவன் உறுப்பாகக் கலந்துள்ளான் என்கின்றது. ஆனால் அம்மையார் இயற்கையாகவே சிவன் இருக்கின்றார், இயற்கையின் தோற்றம், இயக்கம் இரண்டுக்கும் காரணப்பொருளாய் இவரே இருக்கின்றாரெனக் குறிப்பிடுகின்றார். பண்டைத் தமிழர்கள் இயற்கையை வாழ்வின் அடிப்படையாகக் கொண்டனர். இயற்கையுடன் ஒட்டிய வாழ்வியலை வாழ்ந்தனர்.

இயற்கை நெறிக்கால இலக்கியங்கள் இயற்கையின் இயங்கியலை அடிப்படையாகக் கொண்டு பேசின. இதனால் இயற்கையையே இறைவனாக அம்மையார் குறிப்பிட்டார். ‘‘காலையே போன்றிலங்கும்மேனி கடும்பகலின் வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு.....’’ (அற்.திரு - 65) என்று இறைவன் திருவுருவத்தைப் பொழுதுகளுடன் ஒப்பிடப்படுவதைக் கொண்டு, இயற்கையின் இயக்கமாக இறைவனைக் காட்சிப்படுத்தும் கருத்தியலை அம்மையாரிடம் காணக்கூடியதாகவுள்ளது. ‘‘மண் திணிந்த நிலனும், நிலம் ஏந்திய விசும்பும், விசும்பு தைவரு வளியும், வளித் தலைஇய தீயும், தீ முரணிய நீரும், என்றாங்கு ஐம்பெரும் பூதத்து இயற்கை போல’’. (புறம்-02) என்னும் புறனாநூற்று வரிகள் ஐம்பூதங்கள் ஒவ்வொன்றும் இணைந்து செயற்படுவதனை விளக்குகின்றது.

‘‘நிலந்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகு ஆதலில்
இரு திணை ஐம்பால் இயல்நெறிவழலமைத்
திரிவு இல் சொல்லெடு தாழாஅல் வேண்டும்.’ (தொல் பொரு–91)

குறித்த பாடல்கள் ஐம்பூதங்களையும் கலந்தது உலகம் என ஏற்று மதித்து முதற்பொருளான பேரியற்கையைப் பேசுவதற்கு பொருள் முதல் வாதச் சிந்தனையும் ஊற்றாக அமைந்தது.

அம்மையார் ஐந்தொழிலையும் குறிக்கும் நடராஜர் ஆடுவதனாலேயே உலகம் இயங்குகின்றது என்னும் கருத்தினைக் கொண்டுள்ளார். நிலம், நீர், தீ, விசும்பு என்ற நான்கின் அளப்பு அரியையே! என்ற பதிற்றுப்பத்துப் பாடல் இயற்கையின் கொடையினைப் புகழ்ந்து மனிதன் அறம் தவறின் இயற்கை பொறுத்துக் கொள்ளாது என்றும், இயற்கை சீற்றத்திற்கு ஆளாக நேரிடின் அரசையே இவ்வுலகம் குறை கூறும் என்றும் இப்பாடல் விளக்குகின்றது.

இதனால் அம்மையாருக்கு இயற்கையையும் அதன் பேரறத்தினையும் கையிலெடுத்து அறநெறிக்கால அவைதிகமதப் பரம்பலுக்கு எதிரான பிரசாரத்திற்கு, பேசவேண்டிய தேவை எழுந்திருப்பதனை விளங்கிக்கொள்ள முடியும்.

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்.... (அற்.திரு-45) என்னும்பாடல் இறைவனுடைய சைவப் பெருநெறியை பின்பற்றி ஒழுகுகின்றவர்களின் சிந்தையில் நின்று இயங்குகின்ற இறைவனின் முடிவிலாப் பேரருளைப் பற்றிப் பேசுகின்றது. சைவ சமயத்திற்குரிய நெறி கூறுகின்ற இல்வாழ்க்கையில் ஆற்றவேண்டிய கருமங்களான இல்லறம், அன்பு, அறம், ஆக்கம் ஆகிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டு பகுத்துண்டு உலக உயிர்களைக் காத்து வாழ்வாங்கு வாழ்தலை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படுகின்றது.

இல்லறப் பண்பாக உலகியல் சார்ந்ததும், பாலியல் சார்ந்ததுமான அன்புடைமையையும். அதன் பயனான மக்கட்பேற்றையும் வள்ளுவர் விளக்குகின்றார். இல்லறத்திற்கு விருந்தோம்பல், இனியவைகூறல், செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை,

அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெ.ஃகாமை, புறங்கூறாமை, பயனில் சொல்லாமை, வினையச்சம், ஒப்புரவு, ஈகை, புகழ், என்னும் பதினாறு அறங்களை இவர் வலியுறுத்துகின்றார். வள்ளுவரிடம் துறவறத்திலும் இல்லறமே சிறந்தது என்ற கொள்கை மேலோங்கி நிற்கின்றது. இல் வாழ்க்கை என்னும் அதிகாரத்தில்

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்' (குறள்-46)

என்றும் குறட்பாவில் வள்ளுவர் மனித சமுதாயத்திற்கு இல்லறம் எவ்வளவிற்கு முதன்மை உடையது என்பதனை வெளிப்படுத்துகின்றார்.

இல்லறத்தில் வாழ்பவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் துணை நிற்பான் (குறள்-41) என்றும், அவன் துறந்தவர்க்கும் வறியவர்க்கும் இறந்தவர்க்கும் துணையாவான் (குறள்-42) என்றும், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் தான் என்ற ஐவகையிடத்தும் அறநெறி தவறாமல் போற்றுதல் இல்வாழ்வானின் சிறந்த கடைமையாகும் (குறள்-43) என்றும், ஒருவன் அறநெறியில் இல்வாழ்க்கையைச் செலுத்தி வாழ்வானானால், அத்தகையவன் வேறு நெறியில் சென்று பெறத்தக்கது என்ன? (குறள்-45) உள்ளதென்றும், அறத்தின் இயல்போடு இல்வாழ்க்கை வாழ்கின்றவன் - வாழ முயல்கின்றவன் பல திறத்தாரிலும் மேம்பட்டு விளங்குகின்றவன் ஆவான் (குறள்-47) என்றும், வள்ளுவர் குறிப்பிடுகின்ற இல்வாழ்வானின் வாழ்வியல் முறைகளைப் பின்பற்றுகின்ற மனிதன் அறத்தின் இலக்கணங்களைச் சரியாகக் கடைப்பிடிக்கின்றவனாக இருப்பான். இவ்வாறான இல்வாழ்வானின் வாழ்வியல் முறைகளைச் சைவநெறியே கூறுகின்றது. ஆகவே சைவப் பெருநெறியைப் பேணி ஒழுகுபவன் ஈடேற்றம் அடைவான் என அம்மையார் குறிப்பிடுகின்றார். "எளியது இதுவன்றே ஏழைகள் யாதும்..." (அற்.திரு - 46) இச் சைவவாழ்வியல் நெறியில் இல்வாழ்விற்காகப் பொருளீட்டும் திறம் குறிப்பிட்டதனைப் பின்பற்றிப் பொருளீட்டத் தெரியாத வறியவரே! என்று ஏளனமாக அம்மையார் விளிக்கின்றார். வள்ளுவரும்,

"இலம் என்றிசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்." (குறள் - 1040)

இல்லையென்று வறுமையால் சோம்பி இருப்பவரைக் கண்டால் நிலமகள் எள்ளி நகையாடுவாள் என்று குறிப்பிடுகின்றார். அதன் வழிநின்று பொருளீட்டினாலும் நடுவூரில் நச்சுமரம்போல் (குறள் - 1008) வாழும் அறிவிலிகளே! என்று விளிக்கின்ற அம்மையார் இறைவன் தன் இடப்பாகத்தையே உமைக்குக் கொடுத்த கொடைவள்ளல் அவர் தேவர்களுக்காக நஞ்சை உண்டு கண்டத்தில் அடக்கி நீலகண்டன் எனப் பெயரெடுத்த கொடையாளி. "பண்டமார் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு..." (அற்.திரு - 55) அவரைப்பின்பற்றும் நீங்கள் அறத்தின்பால் நின்றொழுகுங்கள் பொருளீட்டுவதும் இரப்போர்க்கு ஈவதும் உங்கள் கடனே எனக் குறிப்பிட்டிருப்பதனைக் காணலாம்.

**நிறைவுரை**

காரைக்காலம்மையாரின் பாடல்களில் மொழிப்பயன்பாடும் எடுத்துரைப்பு முறையும் முரண்பட்டு நிற்பதனைக் கொண்டு அவருடைய இலக்கியப் பிரவேசத்தின் காலச் சூழ்நிலைகளை அறிந்து கொள்ள முடிகின்றது. தனக்கென ஒரு வழிகாட்டி இல்லாத நிலையில் ஆண்மேலாதிக்க வணிக மேலாண்மைச் சமூகத்திலிருந்து கொண்டு இலக்கிய முயற்சியில் கால் பதிக்கும்போது ஏற்படுகின்ற இடர்பாடுகளை அவரது இலக்கியங்களில் காணக்கூடியதாகவுள்ளது.

அம்மையார் தனது இலக்கியங்களில் காபாலிக மரபினை முன்னிறுத்தி திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களில் இறைவன் நடமிடுகின்ற சுடுகாட்டையும் அதனுடன் இணைந்த விடயங்களையும் அதிகம் பேசுகின்றார். ஆனால் இவரது இம்மரபு இவர் பின் வந்த பக்தி இலக்கியகாரர்களால் அதிகம் பின்பற்றப்படவில்லை. அவர்கள் இறைவனை ஒப்பற்ற பரம்பொருளாகவும், தந்தையாக, தாயாக, தோழனாகக், குருவாக, காதலனாக, உறவுநிலைப்படுத்திக் காட்ட முனைந்தனர். அம்மையார் ஒரு பெண்ணாக இருந்துகொண்டு பெண்களுக்காக கட்டமைக்கப்பட்டுவந்த பண்பாட்டு மரபில் நின்று பின்பற்றப்படவேண்டிய பெண்மைக்கான மென்மை, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, முதலான குணங்களை மீறித் தன்னை ஓர் பேயாக உருவகித்துச் சுடுகாட்டின் பின்புலத்தில் நின்று அதன் அச்சமூட்டுகின்ற படிமங்களைப் பாடியுள்ளார். இது தமிழர்களின் அறவியல் சார்ந்த பண்பாட்டு மரபியலை மீறுகின்றதும், உருவ, உள்ளீடுசார் மரபு மீறலாகவும் விளங்குகின்றது.

சைவ நெறி மரபில் காலத்திற்குக் காலம் இருந்து வருகின்ற அறமரபுகளுக்கப்பால் செல்லாது பக்தி மரபுக்குள் அகமரபினை இட்டுச்செல்லும் முனைப்பு அம்மையாரிடம் இருக்கின்றது. திருவிரட்டை மணிமாலையிலும், அற்புதத் திருவந்தாதியிலும் காதல் நிறைந்த பக்தியையும், தாய்மையின் வெளிப்பாடுகளையும் காணமுடிகின்றது.

ஒருகாலத்தில் செல்வாக்குச் செலுத்தி நிற்கின்ற விடயங்கள் விரும்பியோ விரும்பாமலோ அக்கால இலக்கியத்தில் செல்வாக்குச் செலுத்துவது வழமையானதாகும். சேக்கிழார் கூட அம்மையார் பற்றிப் பாடும்போது அவருடைய காலத்திற்குள் சென்று "...........அறவா நீ ஆடும்போது........." (கா.அ.பு – 60) என்று இறைவனை 'அறவன்' என்று பாடுகின்றார். ஆனால் அம்மையாரின் இலக்கியங்கள் அறநெறிக்கால இலக்கியங்களின் அறக்கொள்கைகளுக்கு பெரிதும் ஆட்பட்டிருக்கவில்லை. அறத்தின் வழி ஒழுகுவதற்குச் சைவநெறி மரபில் பேசப்பட்ட அறக் கருத்துக்களையும், நிலையமராக் கருத்துக்களையும், கொள்கைகளையும் அதிகம் பயன்படுத்தியுள்ளார். உலக நிலையாமையை ஏற்றுக்கொள்ளும் அம்மையார் ஈடேற்றம் அடைவதற்கு இல்லற வாழ்வின் பின்னரான துறவினையே வலியுறுத்துகின்றார். ஆகவே அவர் காலத்தில் மேலாதிக்கம் பெற்றிருந்த சமண பௌத்த அறக்கருத்துக்களுக்குள் அகப்படாமல் சைவநெறியில் கடைப்பிடிக்கப்படும் நல்வினை,

தீவினை, பாவம், புண்ணியம், அறநெறி முறைகள், இறப்பிற்குப் பின்னரான சுவர்க்கம், நரகம், ஆன்மவிடுதலை போன்றனவற்றிலான நம்பிக்கையின்பால் மேலெழும் அறக் கொள்கைகளையே அம்மையார் தனது படைப்புக்களில் கையாண்டுள்ளமை தெளிவாகின்றது.

பக்தி இலக்கிய வரலாற்றுப் பாடல்களில் அறத்தினையும், புராண இதிகாசக் கதையில் வரும் அறம்சார் விடயங்களையும், மறத்தின் கேட்டையும் அம்மையார் சித்தரித்திருப்பதும் அதனை பிற்கால பக்தி இலக்கியவாதிகள் கையாண்டிருப்பதும் பக்தி இலக்கிய முன்னோடி என்ற வகையில் இன்றுவரை அவருக்குப் பெருமை சேர்க்கின்றது. தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பக்தி இலக்கிய வரலாற்றிலும் அம்மையார் ஒரு வழிகாட்டியாகத் திகழ்வது தவிர்த்துப் பார்க்க முடியாத ஒன்றாகும்.

## துணை நூற்பட்டியல்.


கிருஸ்ணமூர்த்தி,வே., அல்தூசரின் சித்தாந்தம் முதலிய கட்டுரைகள், சென்னை: ஆய்வுவட்ட வெளியீடு.

கிரபிவின்,வி., (மொ.பெ), (1987) இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன. மாஸ்க்கோ முன்னேற்றப் பதிப்பகம்.

கைலாசபதி,க., (1999), பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், சென்னை: குமரன் புத்தக இல்லம்.

கோபாலகிருஸ்ணமாச்சாரியார்., (2016), திருக்குறள். பரிமேலழகர் உரை, சென்னை: உமா பதிப்பகம்,

சிவத்தம்பி,கா., (2011), பண்டைத் தமிழ்ச் சமூகம்,சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

சிவத்தம்பி,கா.,(2001) தமிழிலக்கியத்தில் மதமும் மானிடமும், சென்னை: மக்கள் வெளியீடு.

செல்வநாயகம்,வி., தமிழ் இலக்கிய வரலாற்று, யாழ்ப்பாணம்: ஸ்ரீலங்கா வெளியீடு.

சேக்கிழார்.,(1950), திருத்தொண்டர்புராணம், சென்னை:திருப்பனந்தாள் வெளியீடு.

ஞானசம்பந்தன்.அ.ச., (1985), பெரியபுராணம் ஓர் ஆய்வு, தஞ்சாவூர்: தமிழ்ப்பல்லைக்கழக வெளியீடு.

ஞானாம்பிகை குலேந்திரன்., (1998), காரைக்காலம்மையார் தென்னிந்திய இசையின் தாய், தஞ்சாவூர்: தமிழ்ப்பல்லைக்கழக வெளியீடு.

தமிழவன்.,(2008), அமைப்பியலும் அதன் பிறகும், சென்னை சென்னை 05: மணி ஆப்செட்,

தில்லைநாதன்,சி., (2012), இலக்கியமும் பண்பாடும், சென்னை: குமரன் புத்தக இல்லம்.

திருநாவுக்கரசு,க.த., (1977), திருக்குறள் நீதி இலக்கியம், சென்னை: அவ்வை அச்சுக்கூடம்.

திருநாவுக்கரசு,க.த., (1987), தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப்பண்பாடு, சென்னை: உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

நடராஜன்.சோ, (2008), தம்மபதம், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

நம்பியாண்டார்நம்பி., (1986), திருத்தொண்டர் திருவந்தாதி, தருமபுரம்: தருமை ஆதீனம்

புலியூர் கேசிகன்., (2006), புறனானூறு. தெளிவுரை, சென்னை: பாரி நிலையம்.

முத்துலட்சுமி.ச ''அறவியலும் பண்பாடும்'' பாவை பிறிண்டேஸ் (பி)லிமிடெட்.

மௌனகுரு,சி., (2006), பண்டைத்தமிழர் வரலாறும் இலக்கியமும், சென்னை: அலைகள் அச்சகம்.

ராஜ் கௌதமன்., (1995), பொய் அபத்தம் உண்மை., சென்னை: அலைகள் அச்சகம்.

ராஜ் கௌதமன்., (1997), அறம்/அதிகாரம், கோவை: விடியல் பதிப்பகம்.

வானமாமலை,நா., (1973), தமிழர் பண்பாடும் தத்துவமும், சென்னை: நியூ செஞ்சூரியன் புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,

வேலுப்பிள்ளை.ஆ., (1980), தமிழர் சமய வரலாறு, சென்னை: பாரிநிலையம்

ஜான் சாமுவேல்,P., (1984), இலக்கியத்தில் சமுதாயப்பார்வை, சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்.